**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.24/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : குமார் |
| Father's Name/ Husband's Name | : கனேசன் |
| Village & Taluk | : மேல்மலையனூர் |
| Calling | : தேனீர்கடை |
| Age | : 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சியம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் மதிய வேலையில் பூங்காவனம் என்பவரின் பெட்டி கடைக்கு அருகில் இருந்தபோது வளத்தி காவலர்கள் அங்கு வந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அங்கு காவலர்கள் என்ன செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 04.05.2019 அன்று பகல் 12.00 மணிக்கு நான் பூங்கவனம் பெட்டி கடை அருகே நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது வளத்தி காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் கையொப்பம் மட்டும் செய்தேன். கடந்த 02.05.2019 அன்று மாலை 05.30 மணிக்கு மேல்மலையனூரில் இருந்து TN 22 C 1800 என்ற சுசூக்கி வண்டியை கோபிநாத் ஓட்டிக்கொண்டும் அவருக்கு பின்னால் குமார் என்பவர் அமர்ந்து வந்து கொண்டிருந்தார்கள் என்றால் தெரியாது. அப்போது பின்னால் வந்த TN 16 X 3111 என்ற XL TVS இரு சக்கர வாகனத்தை ஆஜர் எதிரி கண்ணன் என்பவர்

ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு அதனை காவலர்கள் விசாரணையின்போது கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் அடிப்பட்ட நபர் மற்றும் ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.